IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, PUDUKKOTTAI
( CHAPTER XXIII CODE OF THE CRIMINAL PROCEDURE)
S.C.No.134/2024
Dated:09.02.2026
Deposition of witness for :P.W.3

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. கார்த்திக் | வயது | : | 33/2026 |
| தகப்பனார் பெயர் | : | தங்கராசு | தாலுகா | : | புதுக்கோட்டை |
| கிராமம் | : | புதுக்கோட்டை கணேஷ்நகர் | தொழில் | : | இரண்டாம் நிலை காவலர், கணேஷ்நகர் கா.நி, |

Solemnly affirmed by Thiru. Srinivasan, Grade -I Bench Clerk of this Court in accordance with the provisions of Act X of 1873

**Accused present. Counsel present.**

**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2024/F1-Dt.21.02.2025 the identity of the witness verified with their identity card.**
**Aathar card of the Witness verified.**

**சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை:-**

**1) நான்** தற்போது கணேஷ்நகர் காவல் நிலையத்தில் இரண்டாம் நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன்.

2) ஆஜர் எதிரியை எனக்கு தெரியும்.

3) 17.05.2024ம் மதியம் 13.00 மணிக்கு நானும், உதவி காவல் ஆய்வாளர் திரு. சாகுல்ஹமீது அவர்கள் தலைமையில் எங்களுடன் 1585 இராஜகோபால் காவலர் ஆகியோருடன் புதுக்கோட்டை - ஆலங்குடி பைபாஸ் ரோட்டில், மேட்டுப்பட்டி கேட் அருகே ரோந்து சென்றபோது, ஆஜர் எதிரி கையில் இரும்பு வாளை வைத்துக்கொண்டு, பொதுமக்களை அச்சுறுத்தி, அசிங்கமாக பேசிக்கொண்டிருந்தார். அவர் எங்களை கண்டவுடன் ஓட முயற்சித்தார்.

4) அவர் கையில் இரும்பு வாளை வைத்திருந்ததற்கு காரணம் எதுவும் சொல்லவில்லை. எதிரியை கைது செய்து விசாரிக்கும்போது, **எதிரி தாமாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்.** அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சேக் அப்துல்லாவும், நாகராஜனும் கையெழுத்து செய்தார்கள். பின்பு அவர் கையில் வைத்திருந்த இரும்புவாளை மகஜரில் கைப்பற்றினோம். அந்த மகஜரில் சேக் அப்துல்லாவும், நாகராஜனும் கையெழுத்து செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் இரும்பு வாள்தான் எதிரி கையில் வைத்திருந்தார். **அது சா.பொ.1** ஆகும்.

மு.மா.அ.நீ.,

5) பின்பு எதிரியை காவல் நிலையம் கொண்டு வந்து நீதிமன்ற காவலுக்கு ஆய்வாளர் அனுப்பி வைத்தார். எதிரி கையில் வைத்திருந்த இரும்பு வாளையும் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தார். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) ஆய்வாளர் என்னுடைய மேலதிகாரி என்றால் சரிதான். எதிரியை எங்களுக்கு முன்பே தெரியும். சம்பவ இடம் என்று நான் சொல்வது புதுக்கோட்டை மேட்டுப்பட்டி கேட் ஆகும்.

2) சம்பவ இடத்தை சுற்றி நிறைய கடைகள் மற்றும் வீடுகள் உள்ளது என்றால் சரிதான்.

3) அந்த இடம் மக்கள் நடமாட்டம் அதிகமாக உள்ள பகுதி என்றால் சரிதான்.

4) நான் சொன்ன விதத்தில், சொன்ன நேரத்தில், சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றாலும், ஆஜர் எதிரி எவ்வித ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றாலும், **சா.பொ.1**ற்கும், ஆஜர் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும், புள்ளிவிபர கணக்கிற்காக மேலதிகாரிகளின் உத்தரவின்படி எதிரிருக்கு எதிராக பொய்யான வழக்கு போட்டு, அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை - இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் எதிரி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
புதுக்கோட்டை.